**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.28/2023**
**Joint trail with**
**அசல் வழக்கு எண்.36/2023**

**2025 ஆம்** வருடம் ஜூலை மாதம் 02 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லதா | ஜாதி | : | |
| க.பெ | : | கணேசபாண்டியன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | எம். புதுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 53/2025 |
| தேதி | : | 02.07.2025 | | | |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை வாதி தரப்பு சாட்சியாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 21.01.2023 தேதியிட்ட லேட். கணேசபாண்டியன் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் **(**வா.சா.ஆ**.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. லேட். கணேசபாண்டியன் அவர்களின் மீன்வளத்துறை உறுப்பினர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **(**வா.சா.ஆ**.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 17.03.2005 தேதியிட்ட லேட். கணேசபாண்டியன் அவர்களின் தொழிலாளர் சேமநலநிதி ஓய்வூதிய பலன்கள் பெறுவதற்கு வாதியை, வாரிசாக நியமனம் செய்து அளிக்கப்பட்ட கடிதம் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **(**வா.சா.ஆ**.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 18.11.2011 தேதியிட்ட வாதி சித்தையன்கோட்டை பேரூராட்சி தலைவர் பொறுப்புக்கு போட்டியிட்டு, தேர்தல் அலுவலரால் வழங்கப்பட்ட செலவு கணக்கு ஒப்புகை அட்டை நகல் **(**வா.சா.ஆ**.4/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 1ஆம் பிரதிவாதி மேற்படி வாதிக்கு கொடுத்த குறிப்பாணை அசல் **(**வா.சா.ஆ**.5/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதியின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **(**வா.சா.ஆ**.6/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **(**வா.சா.ஆ**.7/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **(**வா.சா.ஆ**.8/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1 முதல் 8 வரையிலனா ஆவணங்கள் பொய்யான தகவலின் அடிப்படையில் பெறப்பட்ட ஆவணங்கள் என்று 3 ஆம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்கு உட்பட்டு வாதிகள் தரப்பு மேற்படி சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor